# மான்மின் செய்திகள்
# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com













## மான்மின் தலைமை சபையின் 36வது ஆண்டுவிழா ஆராதனையிலும், கொண்டாட்ட கலைநிகழ்ச்சிகளிலும் 22 நாடுகளிலிருந்து வந்திருந்த மக்கள் பங்குப்பெற்றனர்

அக்டோபர் 7, 2018 அன்று மாலை 3 மணிக்கு, மான்மின் தலைமை சபை அதன் 36வது ஆண்டுவிழா ஆராதனையையும், கொண்டாட்ட நிகழ்ச்சிகளையும் தேவனுக்கு ஏறெடுத்தது. அமெரிக்கா, இஸ்ரேல், மற்றும் கொலம்பியா உள்பட 22 நாடுகளிலிருந்து வந்திருந்த மக்கள் பங்குப்பெற்றனர். 31 நாடுகளிலிருந்து அநேகர் தங்களது வாழ்த்துச் செய்திகளை காணொளி செய்தியாகவும், மின்னஞ்சல் மூலமாகவும் அனுப்பி வைத்தனர்.

ஆராதனையும், கலைநிகழ்ச்சிகளும் 170 நாடுகளுக்கும் மேல் ஒளிபரப்பாகிற GCN மூலமாகவும், இணையதளம் வழியாகவும் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது. பின்வரும் எட்டு மொழிகளில் உடனடி மொழிபெயர்ப்பு சேவையும் வழங்கப்பட்டது: ஆங்கிலம், சீனம், ஜப்பானியம், ரஷ்யம், பிரஞ்சு, ஸ்பானியம், மங்கோலியம், வியாட்நாமியம்.

ஆண்டுவிழா ஆராதனையில், போதகர்கள் ஐக்கியத்தின் தலைவர் உயர்திரு. சூஜின் லீ “மகிமை” என்ற தலைப்பில் ஏசாயா 60:1–3ன் அடிப்படையில் செய்தியளித்தார். போதகர். சூஜின் லீ, தேவன் பிரியப்படுகிற விசுவாச கிரியைகளின் மூலமாக முழு உலகமெங்கிலும் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்த வேண்டும் என பங்குப்பெற்ற ஒவ்வொருவரையும் உற்சாகப்படுத்தினார்கள்.

செய்திக்குப் பிறகு ஏறக்குறைய 40 நிமிடங்களுக்கு “மலர்களின் சாலையில் விருந்து அறை” என்ற தலைப்பின்கீழ் கொண்டாட்ட கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. துதி ஆராதனை தலைவி ரோஸ் ஹான், கலைக்குழுவினர்கள் மற்றும் கலைநிகழ்ச்சி குழுவைச் சேர்ந்த நிசி ஆர்க்கெஸ்ட்ரா, இம்மானுவேல் பாடகர்குழு, பணியாளர்கள், வெளியிலிருந்து வந்திருந்த மற்ற வேலையாட்கள் என ஏறக்குறைய 290க்கும் மேற்பட்டோர் ஒரு உயர்தரமான கிறிஸ்தவ கலைநிகழ்ச்சியை வழங்கும்படி இணைந்து பணியாற்றினார்கள்.

சபையின் முன்புறம் அழகான வடிவமைப்புகளும், “மலர்களின் சாலையில் விருந்து அறையின்” மாதிரி வடிவங்களும் புகைப்படங்களை எடுத்துக்கொள்வதற்காக அமைக்கப்பட்டிருந்தன. ஆண்கள், பெண்கள் குழுவினர்கள், கானான் குழுவினர்கள், வாலிப குழு அங்கத்தினர்கள் ருசியான உணவுகளான கொரியன் காய்கறி கேக், பஞ்சுமிட்டாய், கொரிய மிட்டாய்கள் போன்ற பல உணவுகளை பரிமாறி மற்ற விசுவாசிகளுக்கு உதவிசெய்தனர். வெளியே திருச்சபை அங்கத்தினர்கள், அவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் நல்லதொரு தட்பவெட்பத்தின்கீழ் அவற்றை உண்டு மகிழ்ந்தனர்.

நிஜத்தில், அக்டோபர் 6 சனிக்கிழமை அன்று, கொங்ரே என்ற சக்திவாய்ந்த சூறாவளி தென் கொரியாவை கடுமையான காற்று மற்றும் பலத்த மழையோடு கடந்துச் செல்லும் என்று வானிலை அறிக்கையாளர்கள் எச்சரிக்கை விடுத்திருந்தனர். எப்படியிருந்தாலும், அதிகாலையில் மழை பெய்து நின்றுவிட்டது, அந்த நாளில் மதியம் ஒரு மணிக்கு சபைக்கு வெளியே திட்டமிடப்பட்டிருந்த ஆயத்தவேலை நேரத்தில் சூரியன் பிரகாசித்துக் கொண்டிருந்தது. இதனால் சபை பணியாளர்கள் எவ்வித பிரச்சனையும் இன்றி எல்லாவற்றையும் ஆயத்தம் செய்ய முடிந்தது. அந்த அருமையான வானிலை அடுத்த நாளான ஞாயிற்றுக்கிழமையும் தொடர்ந்ததால் அனைவரும் வெளிப்புறத்தில் சிறந்த நேரத்தை அனுபவிக்க முடிந்தது.

அக்டோபர் 5ம் தேதி வெள்ளிக்கிழமை முழு இரவு ஆராதனையின் இரண்டாவது பகுதியில், ஆண்டுவிழா கொண்டாட்டத்தின் துவக்க நிகழ்ச்சிகள் “புதிய எருசலேமை நோக்கி” என்ற தலைப்பில் நடைபெற்றது. துதிகள், நடனங்கள், காணொளி காட்சிகள் மூலமாக சபை விசுவாசிகள் புதிய எருசலேமிற்கான ஊக்கமான நம்பிக்கையையும், தேவனுக்கான நன்றியின் தூபத்தையும் ஏறெடுத்தனர்.

### “மான்மின் சபையின் எதிர்கால ஊழியத்தின்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளேன்!”

**போதகர் செரேகே பொச்சர்னிக்கோவ், நாசரேத்திலுள்ள ஜீவ ஆவியின் சபை, இஸ்ரேல்**



ஆண்டுவிழா கொண்டாட்ட கலைநிகழ்ச்சிகளினால் நான் ஆழமாய் தொடப்பட்டேன். புதிய எருசலேம் நகரம் என் கண்முன்னே வந்திறங்கியதைப் போன்று உணர்ந்தேன். அங்குச் செல்லும்படி மிகவும் வாஞ்சையை பெற்றேன். அது எனக்கு மிகுந்த ஆசீர்வாமாக அமைந்தது.

தன்னுடைய முழு இதயத்தோடு இஸ்ரேலை நேசித்து, அக்கறை காண்பித்துக் கொண்டு வருகிற அறிவர். ஜேராக் லீ அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றிகளை வெளிப்படுத்த விரும்புகிறேன். அவர் ஆவிக்குரிய ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் இஸ்ரேல் சபைகளுக்கு உதவியையும் ஒத்துழைப்பையும் தந்து கொண்டிருப்பதற்காகவும் நன்றி செலுத்துகிறேன்.

மான்மின் ஊழியத்தின் மூலமாக உலகமெங்கிலும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் இன்னும் அதிகமாக அறிவிக்கப்படும் என்றும், அறிவர். லீ அவர்களுக்காக தேவன் வைத்துள்ள நன்மையான சித்தமும் மிகப்பெரிதான விதத்தில் நிறைவேற்றப்படும் என்றும் நம்புகிறேன்.

# அன்பின் இதயம்



தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ

**“நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்” (ரோமர் 5:8).**

நாம் நம்முடைய பாவங்களினிமித்தம் நித்திய மரணத்தின் ஆக்கினை தீர்ப்பை பெறுவதற்கு நியமிக்கப்பட்டிருந்தோம். ஆனால் தேவன் தம்முடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசுவை நம்மை இரட்சிப்பதற்காக அனுப்பினார். நீங்கள் இந்த ஆழமான அன்பை உங்கள் இருதயங்களில் உணர்ந்தால், உங்கள் வாழ்வு மாற்றத்திற்கு பிணைப்பட்டுள்ளது.

முதலாவது, தேவ அன்புக்கு கைமாறாக அவருடைய சித்தத்தின்படி வாழ்வதற்கு உங்களுக்கு ஆசை இருக்கும். நீங்கள் பாவங்களை களைந்துப்போட்டு தேவனுடைய பரிசுத்த பிள்ளைகளாய் மாற முயற்சிப்பீர்கள். நீங்கள் நித்தியமான பரலோகத்திற்காக வாஞ்சையோடிருப்பீர்கள்.

தேவ அன்பை உணருகிறவர்களில் ஏற்படுகிற மற்றொரு மிக முக்கியமான மாற்றம் என்னவென்றால், அவர்கள் இந்த அன்பை மற்ற மக்களிடமும் பகிர்வார்கள். விசேஷித்தவிதமாக, ஆத்தும ஆதாய பணி உங்களுக்கு இருக்குமாயின், நீங்கள் இந்த அன்பை பண்படுத்துவதோடு உங்கள் இருதயத்தின் ஆழத்தில் இதை உணர வேண்டும்.

தேவனுடைய ராஜ்ஜியத்தை முழுவீச்சாக விரிவடைய செய்வதற்கு அவசியமான இந்த அன்பின் இருதயத்தைக் குறித்து இப்போது தியானிப்போம்.

## முதலாவது, இது மற்றவர்களை தங்களை விட சிறந்ததாக கருதுகிற இதயம்

பிலிப்பியர் 2:3 சொல்கிறது, “ஒன்றையும் வாதினாலாவது, வீண் பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரை–யொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்.”

அன்பு பிறரை மட்டமாக பார்க்கவோ அல்லது தகுதிக்கு ஏற்றவாறு இல்லாததாக நடத்தவோ செய்யாது. மற்றவர்கள் பத்து எதிர்மறை பண்புகள் கொண்டிருந்தாலும், அவர்களிடம் குறைந்தபட்சம் ஒரு நல்ல பண்பு இருந்தால், நீங்கள் அதை அங்கீகரித்து அந்த நல்ல பண்புக்காக அவர்களைப் பாராட்டுவீர்கள். அவர்கள் ஒரு காரியத்தை மட்டுமே உங்களைவிடச் சிறப்பாக செய்தாலும்கூட, நீங்கள் அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள முயற்சித்து அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். அதனால் நீங்கள் அனைவரும் சேர்ந்து முன்னேறி செல்லலாம்.

நான்தானே மற்றவர்களைவிட என்னை ஒருபோதும் சிறந்தவனாக கருதியதில்லை. சிறியவர்களின் கருத்துக்களை கூட ஒருபோதும் நான் அலட்சியம் செய்ததில்லை. சில காரியங்களை அவர்களிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மையோடு நான் எல்லா மக்களிடமும் தொடர்பு கொண்டேன். நீங்கள் மற்றவர்களை மட்டமாக பார்த்து உங்களுக்கு அதிக உற்சாகம் அல்லது நீங்கள் ஒரு தலைவனாக இருக்கிற காரணத்தால், உங்கள் கருத்துக்களை வலியுறுத்துவீர்களாகில், பின், அது அன்பு இல்லை.

## இரண்டாவதாக, அன்பின் இதயமானது மனதுருக்கத்தின் இருதயமாக இருக்கிறது

லூக்கா 10 ஆம் அதிகாரத்தில் நல்ல சமாரியனுடைய உவமை ஒன்றுள்ளது. ஒரு குறிப்பிட்ட மனிதன் கொள்ளையடிக்கப்பட்டு, பயங்கரமாய் அடிக்கப்பட்டு, குற்றுயிராய் விடப்பட்டான். ஒரு ஆசாரியனும் ஒரு பரிசேயனும் அவனுக்கு உதவாமல் விலகி கடந்துச் சென்றார்கள். அவர்கள் தேவனுக்கு பலி செலுத்தி, பிரமாணங்களை கைக்கொண்டார்கள். ஆனால் பிரச்சனையில் இருக்கும் ஒருவனுக்கு உதவுவதற்கு அவர்களுக்கு மனதுருக்கம் இல்லை.

ஆனால் அவ்வழியாய் கடந்துச் சென்ற சமாரியன் தேவையுள்ள தனது அயலான் மீது மனதுருக்கமுடையவனாய் இருந்தான். அவன் அவனுடைய காயங்களை கட்டி, சத்திரத்தில் கொண்டு வந்து, அவனைப் பராமரித்து, அவன் தங்குவதற்காக கட்டணம் செலுத்தினான். இப்பேர்பட்ட அன்பை தான் ஆண்டவர் நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார். பிறரை அவர்களுடைய விசுவாசத்திற்கு ஏற்றபடி புரிந்துகொண்டு, பட்சமாய் நடப்பதற்கு உங்களுக்கு இந்த அன்பின் இருதயம் இருக்கும்போதுதான் நீங்கள் பெலவீனருக்காகவும், கஷ்டத்தில் உள்ளவர்களுக்காகவும் மனதுருக்கம் கொண்டு அவர்களுக்கு உதவ முடியும்.

இயேசுவானவர் இந்த உலகத்திற்கு மனுஷ மாம்சத்தில் வந்தார். மேலும் எபிரெயர் 4:15 அவர் நம்முடைய பெலவீனங்களில் பரிதபிக்கிறார் என்று சொல்கிறது. இதன் அர்த்தம் நம்முடைய நிலைகளையும் சூழ்நிலைகளையும் புரிந்துகொண்டு இரக்கங்கொண்டு நம்மோடு பச்சத்தாபம் கொள்கிறார். இதன் காரணமாகவே அவர் குருடர்களை அல்லது முடவர்களை குணமாக்கினார். மரித்தோரை உயிரோடெழுப்பினார். அவர் அதை அன்புடனும் பரிவுடனும் செய்தார். விதவையின் ஒரே மகன் மரித்தபோது, அவர் தனித்துவிடப்பட்ட விதவைக்காக மனதுருக்கங் கொண்டு அவளுடைய மகனை உயிர்ப்பித்தார். சில நேரங்களில் அவரை பின்பற்றுகிறவர்களின் உணவுக்காக அவர் கவலைப்பட வேண்டியிருந்தது. அவர், “ஏழு அப்பங்களையும் சில சிறுமீன்களையும்” கொண்டு கிரியை செய்து அவர்களுக்கு உணவளித்தார் (மாற்கு 8:3). அவர் அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்ததற்கு காரணம் அவர் ஆத்துமாக்களுக்காக மனதுருகினார்.

கூடவே, அவருடைய கிருபைக்காக நன்றிசெலுத்தி, மக்கள் அவருக்கு அளித்த வெகுமதிகளை ஏழைகளுக்கு உதவி செய்வதற்கு பயன்படுத்தினார். வேதாகமம் தரும ஊழியத்திலே மிகப் பெரிய வலியுறுத்துதலைக் கொடுக்கிறது. ஆதித் திருச்சபையிலே தரும வேலை ஊழியத்தின் மிக முக்கியமான பகுதிகளில் ஒன்றாய் இருந்தது (கலாத்தியர் 2:10). ஆதித் திருச்சபை ஏழு கண்காணிகளை நியமித்ததன் காரணம் சரியாக இந்த தரும ஊழியத்தின் வேலையை செயல்படுத்–துவதற்காகவே.

நீதிமொழிகள் 19:17 சொல்கிறது, “ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்–கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்.” நாம் ஏழை ஆத்துமாக்கள் மீது கிருபையாய் இருக்கும்போது, இதை தேவன் நமக்கு தனிப்பட்ட முறையில் கடன்பட்டதுபோல கருதுகிறார். அவர் அதை நமக்கு திரும்பக் கொடுப்பார். மனதுருக்கத்துடன் நற்குணத்தின் கிரியைகளை சேகரித்து வைப்பது எழுப்புதலுக்கான வழியாகும். மேலும் உங்கள் மனோவாஞ்சைகளைப் பெற்று, உங்களை நீங்களே மாற்றிக்கொள்வதின் வழியும் ஆகும்.

## மூன்றாவதாக, அன்பின் இருதயம் என்பது மற்றவர்களுக்காக எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்கிறதாயிருக்கிறது

இயேசுவானவர் பூமியிலே ஊழியம் செய்து கொண்டிருக்கையில் மிகவும் ஓய்வில்லாத வாழ்வு வாழ்ந்தார். யூதேயா, கலிலேயா, மற்றுமுள்ள பகுதிகளில் பயணித்து கொண்டிருக்கையில், அவர் ஒவ்வொரு நிமிடங்களையும் ஏன் நொடிகளையும் சுவிசேஷத்தை பிரசங்கிப்ப–தற்காக சேமித்தார். அவரை ஒரு கூட்டம் சூழ்ந்தபோது, அவர் வார்த்தையை போதித்து வியாதியை சுகமாக்குகையில் உண்பதற்கோ அல்லது உறங்குவதற்கோ போதிய நேரம் இல்லாதிருந்தது.

அவர் மூன்று வருடங்கள் தம்முடைய ஆற்றல் அனைத்தையும் செலவழித்தும், அவர் எல்லாவற்றையும் செய்து முடித்துவிட்டதாக கருதவில்லை. அவர் சிலுவையிலே தம்முடைய ஜீவனை தந்து, அவருடைய அனைத்து தண்ணீரையும் இரத்தத்தையும் சிந்தினார்.

இன்றைக்கும் அவர் ஓய்வெடுக்கவில்லை, அவர் உயிர்த்தெழுந்து பரமேறி சென்ற பின்னர் இதுவரையும் உணவு உண்ணாமல் அவர் ஆத்துமாக்களுக்காக பரிந்துபேசி, நம்முடைய பரம வாசஸ்தலங்களை ஆயத்தம்செய்து கொண்டிருக்கிறார். இதுதான் மீண்டும் மீண்டும் கொடுக்கிற ஆண்டவருடைய அன்பின் இருதயம். நாமும்கூட இவ்விருதயத்தை பண்படுத்த வேண்டும் என அவர் விரும்புகிறார். நாம் உண்மையாய் ஒருவரை நேசிப்போமேயானால், நாமும்கூட நம்மை நாம் தியாகம் செய்ய முடியும் (1 தெசலோனிக்கேயர் 2:8).

நான் எண்ணற்ற உபவாச ஜெபங்கள் மூலமாக தேவனுடைய வல்லமையையும் ஆவிக்குரிய பிரசங்கங்களையும் பெற்றுக் கொண்டேன். செய்திகளுடனும் வல்லமையுடனும், நான் ஜீவனுள்ள தேவனுக்கு சாட்சி பகருகிறேன். ஆயினும், நானே எல்லாவற்றையும் செய்தேன் என்று சொல்வதில்லை. இந்தத் திருச்சபையில் நடைபெற்ற அனைத்திற்கும் நான் முழு உத்தரவாதம் எடுத்துள்ளேன். தேவன் அசட்டைப் பண்ணப்பட்டு விடாதபடிக்கு என்னுடைய சிறப்பின் அனைத்தோடு உபவாசித்து அல்லது சமாதான காணிக்கைகளை கொடுத்துள்ளேன். என்னுடைய கண்ணீரின் ஜெபத்தின்மூலமாக பாவசுவரை அழிக்க முயற்சித்தேன்.

விசுவாசிகள் பாவஞ்செய்து இரட்சிக்கப்பட முடியாமல் போகும்போது, “நான் போதுமான அளவு அவர்களுக்கு சத்தியத்தை கற்பித்து கொடுத்துள்ளேன், இருப்பினும் அவர்கள் பாவஞ்செய்கிறார்கள். என்னால் அவர்களுக்கு உதவமுடியாது” என்று நான் சொல்லவில்லை. ஆனால் தேவனை நான் பற்றிக்கொண்டு, நான் அவர்கள் மேய்ப்பனாயிருக்கிறபடியால் இவை அனைத்தும் என் தவறு என்று சொல்லி அவரிடம் கெஞ்சினேன்.

சில மக்கள் தொடர்தேர்ச்சியாக என்னோடு செய்த வாக்கை உடைத்தார்கள். வேறுசிலர் முறுமுறுத்தார்கள், பேச மறுத்தார்கள், அல்லது காரணமில்லாமல் மற்றவர்களை கோபித்துக் கொண்டார்கள். இன்னும் சிலர் இருளின் கிரியைகளை பெற்றுக்கொண்டு மாம்ச சிந்தனைகளின் உலைக்குள் விழுந்தார்கள். ஆகவே அவர்கள் எவ்வளவு சத்தியத்தைக் கேட்டாலும் தொடர்ந்து எதிர்மறையான காரியங்களையே சொல்லிக்கொண்டிருப்பார்கள். நான் அவர்களுக்கு கண்ணீரோடு போதித்து, ஆலோசனைச் சொன்னாலும், சில ஆத்துமாக்களால் உலகத்தை துண்டித்து எறிய முடியவில்லை. பாவத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கிறார்கள்.

நீங்கள் இப்பேர்பட்ட ஆத்துமாக்களையும் தொடர்ந்து நேசித்து சேவை செய்வீர்கள் என நம்புகிறேன். நீங்கள் அவர்களை நேசித்து எல்லாவற்றையும் அவர்களுக்குக் கொடுத்தால் உங்கள் கிரியைகள் அனைத்தும் மகா மகிமையான பிரதிபலனாக அருளப்படும். நீங்கள் எழுப்புதலின் கனியை மட்டுமல்லாது பரலோகத்தில் நித்திய மகிமையையும் அனுபவிப்பீர்கள்.

கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, தேவன் சிலுவையின் அன்பின் மூலமாக இரட்சிப்பு, நித்திய ஜீவன், மற்றும் பரலோகத்திற்கான பாதையை பெரிதாக திறந்துள்ளார். நாம் நம்முடைய நன்றியோடு அவருக்காக வேலை செய்ய நம்மை அர்ப்பணிக்கும்போது, நம்முடைய ஆத்துமா செழித்தோங்குவது போல அவர் நம்மை எல்லாவற்றிலும் செழித்தோங்கச் செய்வார். மேலும் அவர் நமக்கு அமுக்கி, குலுக்கி மடியில் சரிந்து விழும்படியாகவும், 30, 60, 100 மடங்காக அதிகமாக கைமாறு செய்வார்.

இந்த நம்பிக்கையுடன் நீங்கள் தேவனுடைய ராஜ்யத்தை விரிவுப்படுத்தி, பின்னர் சூரியனைப் போன்ற மகா மகிமையில் வாசம் செய்ய வேண்டும் என்று ஆண்டவருடைய நாமத்தில் உங்களுக்காய் ஜெபிக்கிறேன்.

### விசுவாசத்தின் அறிக்கை

**1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.**
**2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்**
**3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.**
**4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.**
**5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை “அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்” மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.**

“எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)...” (அப். 17:25)

“அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை” (அப். 4:12)

மான்மின் தலைமை சபையின் 36வது ஆண்டுவிழா



## "விசுவாசமில்லாமல், மான்மின் பெரிதான ஊழியமாக வளர்ந்திருக்க முடியாது!"

திருமதி. ரோசல்பா ரோட்ரிகியுஸ் டி ரின்கோன், எண்லஸ் கொலம்பியாவின் தலைவர்

நான் ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு இந்த முறை மான்மின் தலைமை சபைக்கு வந்தேன். என்னுடைய அன்பான அறிவர். டாக்டர். ஜேராக் லீ அவர்கள் நடத்துகிற சபையின் வளர்ச்சியை கண்டு நான் மிகவும் சந்தோஷமடைந்தேன்.

எண்லஸ் கொலம்பியா அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்களை "ஜீவனுள்ள வார்த்தைகள்" என்ற தலைப்பில் ஒளிபரப்பி கொண்டு வருகிறது. எங்கள் அலைவரிசையை 95 சதவீத கொலம்–பியர்கள் பார்த்து வருகிறார்கள். மேலும் DTH (Direct-to-Home) சேவையானது தேசத்தில் 80 முதல் 85 சதவீத இடங்களுக்கு ஒளிபரப்–பாகிறது.



அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்கள் தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் உறுதியாக கட்டப்பட்டதாய் இருப்பதாலும், பார்வையாளர்களின் இருதயங்களின் ஆழங்களை சென்றடைகிற ஆவிக்குரிய ஆழமுடையதாக இருப்பதாலும் மிகவும் பிடிக்கிறது. இந்த ஜீவனுள்ள வார்த்தைகள் இருதயங்களைப் புதிப்பிக்கிறது, ஜீவனளிக்கிறது, சுகமாகுதலின் கிரியைகளை அளிக்கிறது, குடும்பங்களுக்குள்ளாக இணக்கத்தை புதுப்பிக்கிறது. மேலும், அநேக போதகர்களையும் அது ஈர்க்கிறது. அறிவர். லீ அவர்களின் பிரசங்கங்கள் கொலம்பிய மக்களையும், அவர்கள் குடும்பத்தையும் புதுப்பிக்கிற ஆவிக்குரிய அதிகாரமுடையதாக இருப்பதால், அவருடைய பிரசங்கத்தை மற்ற போதகர்கள் தாங்கள் கொடுக்கும் பிரசங்கத்தில் விவரிக்கின்றார்கள்.

மான்மின் விசுவாசிகள் அருமையான, அன்பான, மிகவும் கரிசனையானவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் எங்களுடைய ஒவ்வொரு நிமிடத்தையும் கருத்தில் கொண்டவர்களாய் நன்றாக சிந்தித்து பணிவிடை செய்தார்கள். கொண்டாட்ட கலைநிகழ்ச்சிகளும் மிகவும் அற்புதமாக இருந்தது. பூக்களினால் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டிருந்த மேடையின் வடிவமைப்பு தனித்துவமாக இருந்தது; கலை நிகழ்ச்சிகளின் செயல்முறை நன்றாக நடத்–தப்பட்டது. அவை வியக்கத்தக்கதாக இருந்தது! அதிரும் வண்ண ஒளிகள், அழகான திரைச் சீலைகள் மற்றும் சிறந்த பாடல்கள் நான் வசீகரமான மாட்சிமையான பரலோகத்தின் சாலையில் இருப்பதைப் போல என்னை உணர வைத்தது.

மான்மின் விசுவாசத்தால் துவக்கப்பட்டது. ஒருவேளை இந்தச் சபையின் வளர்ச்சியானது விசுவாசத்தினால் நிகழ்ந்திராவிட்டால், இந்த அற்புதமான 36வது ஆண்டுவிழாவை அவர்கள் கொண்டாடி இருக்கவே மாட்டார்கள். அவர்கள் தேவனுடைய அறிவிற்கு நேராக அநேக மக்களை வழிநடத்தும்படி மிகுந்த பிரயாசப்பட்டிருக்கிறார்கள். விசுவாசமில்லாதிருந்தால், இந்த மகத்தான ஊழியத்தை அவர்களால் அடைந்திருக்கவே முடியாது.

மான்மின் தலைமை சபையின் வெற்றிக்கும், எழுப்புதலுக்கும், வளர்ச்சிக்கும் விசுவாசமே திறவுகோல். விசுவாசத்தின் மூலமாகதான் அவர்கள் தென் கொரியாவின் எல்லையை தாண்டி, உலகத்தின் பல பகுதிகளுக்கு மேன்மேலும் செல்ல முடிந்தது. இப்படியாக அவர்களுடைய ஊழியத்தினால் மிகுந்த லாபத்தை அடைந்த நாடுகளில் ஒன்றுதான் கொலம்பியா. கொரியாவிற்கு மேற்கொண்ட என்னுடைய பயணம் ஒரு ஆச்சரியமான அனுபவமாகவும், மிகுந்த ஆசீர்வதமாகவும் அமைந்தது.

## "கலைநிகழ்ச்சிகள் தனித்துவமாய் இருந்தது, அனைத்திலும் தேவ அன்பை நான் உணர்ந்தேன்!"

சகோதரர் லூயிஸ் எஸ்டிலா கொன்சலெஸ், புளோரிடா, அமெரிக்கா

மான்மின் தலைமை சபைக்குச் செல்ல வேண்டும் என்ற ஆவலோடிருந்தேன், முடிவாக 36வது ஆண்டுவிழாவில் பங்குப்பெற வந்தேன். நான் சபைக்கு வந்து இறங்கியவுடன், எதிர்ப்பார்த்ததைக் காட்டிலும் மிகவும் ஆச்சரியமடைந்தேன். அவ்வளவு அழகாய் இருந்தது. அதன் விசுவாசிகள் கிருபையினாலும் அன்பினாலும் நிறைந்திருந்தார்கள். நான் தேவனுக்கு அருகாமையில் இருப்பதை உணர்ந்தேன். கலைநிகழ்ச்சிகள் தனித்துவமாய் இருந்தது, அனைத்திலும் தேவனுடைய அன்பை நான் உணர்ந்தேன்.



ஸ்பானிய மொழி பேசும் மக்களுக்கான முன்னணி கிறிஸ்தவ தொலைக்காட்சியான எண்லஸ் டிவி மூலமாக 2014ம் ஆண்டு நான் மான்மினை குறித்து கற்றுக்கொண்டேன். அறிவர். ஜேராக் லீ அவர்களின் பிரசங்கங்கள் என் இருதயத்தை ஆழமாய் தொட்டது. குறிப்பாக, "சிலுவையின் செய்தி," "விசுவாசத்தின் அளவு," "அன்பின் அதிகாரம்," "நற்குணம்" போன்ற பல பிரசங்கங்கள். நானும் என் மனைவியும் மான்மின் விசுவாசிகளாக 2015ம் ஆண்டு இணையதளத்தில் பதிவுசெய்தோம்.

செப்டம்பர் 2017ல், அறிவர். லீ அவர்களின் ஜெபத்தைப் பெற்ற பிறகு இர்மா புயலின் அச்சுறுத்தல்களிலிருந்து நாங்கள் பாதுகாக்கப்பட்டோம். நாங்கள் புளோரிடாவிலேயே மக்கள் அதிகம் வசிக்கும் வடகிழக்கு மியாமியில் வாழ்ந்து வந்தோம். அந்த நேரத்தில், வரப்போகும் புயலைக் குறித்து மக்கள் மிகவும் கவலைப்பட்டு கொண்டிருந்தனர்.

வானிலை அறிக்கையில் எங்கள் பட்டணத்திற்கு மிகவும் கேடான பேரழிவு வருமென்று சொல்லப்பட்டிருந்ததால், நாங்கள் தலைமை போதகரிடத்திற்கு ஜெப விண்ணப்பத்தை அனுப்பினோம். அவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஜெபித்த பிறகு, இர்மா புயல் வலுவிழந்து போனது; குறைந்த புயல் எண்ணாக மாறிவிட்டது. அவருடைய வல்லமை எவ்வளவு பெரியது என்பதை நாங்கள் பார்க்க முடிந்தது. அவருடைய ஜெபத்திற்கு நன்றிசொல்லும் விதமாக, நாங்கள் எவ்வித பாதிப்பும் அடையவில்லை; அவருடைய ஜெபம் எங்களுக்கு மிகப் பெரிய ஆசீர்வாதத்தை அருளியது.

என் வேலைஸ்தலத்தில் சம்பள உயர்வைப் பெறும்படியாக நான் ஜெபித்து வந்தேன். நான் சமீபத்தில் தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டேன். தேவனுடைய அன்பையும், கர்த்தருடைய கிருபையையும் எங்கள் வாழ்க்கையில் அனுபவிக்கும்படி எங்களுக்காக ஜெபித்த தலைமை போதகருக்கு என் நன்றிகளைச் செலுத்துகிறேன்.



## "கிறிஸ்துவின் அன்பை நான் உணருமளவிற்கு திருச்சபை விசுவாசிகள் கனிவாக இருந்தனர்!"

சகோதரர் லிம் ஜெஃப்ரி, சேரன்கான், சிங்கப்பூர்

மான்மின் தலைமை சபையின் ஆராதனை வேளைகளில் இணைந்து கொள்வது அற்புதமானது. நான் GCN மூலமாக மாத்திரமே அதில் பங்குப்பெற்று வந்தேன். அழகான மேடை வடிவமைப்பு என்னை பரவசப்படுத்தியது, துதிப்பாடல்கள் வல்லமையாய் இருந்தது.



அறிவர். ஜேராக் லீ அவர்கள் எப்பொழுதும் எங்களுக்கு எப்படி பரிசுத்தமாகுவது, அயலாரை நேசிப்பது என்பதை கற்றுக் கொடுக்கிறார். திருச்சபை விசுவாசிகளும் கர்த்தருடைய வார்த்தைக்கு சந்தோஷத்துடன் கீழ்ப்படிவதை பார்க்க முடிந்தது. அவர்கள் மிகவும் அருமையாக, கனிவும் அன்பும் கொண்டிருந்தனர்! நான் சிங்கப்பூர் மான்மின் சபையில் முதல் முறையாக தானியேல் ஜெபக்கூட்டத்தில் GCN வழியாக பங்குப்பெற்றதை நினைவு கூருகிறேன். நான் அதிர்ச்சியடைந்தேன், காரணம் சொல்லப்படும் ஜெபத் தலைப்புகளுக்காக பங்குப்பெற்ற மக்கள் ஒரு மனதோடு கதறி ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். நான் அதுவரை பங்குப்பெற்ற ஜெபக்கூட்டங்களிலிருந்து அது முற்றிலும் மாறுப்பட்டதாக இருந்தது.

நான் ஜெபவேளையில் பரிசுத்த அக்கினியை அனுபவித்தேன், பரத்திலிருந்து அன்பு இறங்கி வந்தது. மான்மினின் 36வது ஆண்டுவிழாவிற்கு என் வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பூமியில் இப்படிப்பட்ட அழகான உண்மையான சபையை ஏற்படுத்திய தேவனுக்கு சகல நன்றிகளை செலுத்துகிறேன்.








ஆண்டுவிழா துவக்க கலைநிகழ்ச்சிகள்
**“புதிய எருசலேமை நோக்கி”**


ஆண்டுவிழா கலைநிகழ்ச்சிகள்
**“மலர்களின் சாலையில் விருந்து அறை”**











GCN Global Christian Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS Manmin International Seminary
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049, PH: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: manminnewsasia@gmail.com

WCDN World Christian Doctors Network
15D/41, Ponnan Kinaru Street, Villivakkam, Chennai -600 049
PH: 044-26172471
e-mail: wcdnindo@gmail.com